2017 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், உரையை முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *நிதியே ஒதுக்காமல் கொடுத்ததனால்தான் அந்த நிலுவைத் தொகை இருக்கிறது.*

அதேபோல பணிமனைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 10 போக்குவரத்துப் பணிமனைகள் உருவாக்கப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 74 பணிமனைகளை உருவாக்குவதாகச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) 36 பணிமனைகளைத் திறந்து வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பொழுது 4 புதிய பணிமனைகளை திறந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே பதிவு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிச் சுமைக்கு தி.மு.க. தான் காரணம் என்பதற்கு காரணங்கள் இருக்கின்றன, அதை நாளை விளக்கமாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–3–2017) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 3–52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 29–11–2016 ஆம் நாளிட்ட தமிஒஆ/நுகும & மிகு/6–11 ஆம் எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2017 மார்ச் 22

30. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

31. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

32. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

33. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

34. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

35. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

....

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS